**இந்தியா பௌண்டேசன் பார் தி ஆர்ட்ஸ் (ஐ.எ.ஃ.ப்.ஏ)**

**கலை ஆய்வுத்திட்டத்திற்கான (Arts Research Programme)**

**விண்ணப்பங்களை வரவேற்கிறது**

**விண்ணப்பிக்கக் கடைசி நாள்: புதன்கிழமை, ஆகஸ்ட் 16, 2023, 11:59 பி.ப.(ஐ.எஸ்.டி.)**

கலை ஆய்வுத்திட்டம் இந்தியாவில் கலைச்செயற்பாடுகள் குறித்த பல்வேறு விதமான வரலாறுகளையும் வெளிப்படுத்துதல்களையும் ஆய்வு செய்வதற்காக அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் கலைச்செயற்பாட்டாளர்களை (practitioners) ஈடுபடுத்தி வருகின்றது. இத்திட்டம் இதன்மூலமாகக் கலைகள் குறித்த விசாலமான பார்வைகள், புரிதல்கள், பொருள்கோடல்கள் மற்றும் ஈடுபாடுகளை வளர்த்தெடுக்க முற்படுகின்றது.

ஐ.எ.ஃ.ப்.ஏ. செயற்படுத்தியுள்ள ஆராய்ச்சி வேலைத்திட்டங்களில் (research projects) ஆர்வமுடைய ஆய்வாளர்கள் மற்றும் கலைச்செயற்பாட்டாளர்களிடமிருந்து எங்களின் கலை ஆய்வுத்திட்டத்திற்கான முன்வரைவுகள் (proposals) வரவேற்கப்படுகின்றன. அதிகம் ஆய்வுக்குட்படுத்தப்படாத அல்லது விளிம்பு நிலையிலுள்ள கலைவெளிகளை ஆராய்வதாகவோ, கோட்பாட்டிற்கும் செயற்பாட்டிற்கும் இடையிலான உரையாடலுக்கான தளங்களை உருவாக்கும் நோக்கமுடையதாகவோ, கலைச்செயற்பாடுகள் குறித்த புதிய வாசிப்புகளை (பொருள்கோடல்களை) வழங்கக்கூடியதாகவோ, புதுக் கோட்பாட்டுத் தளங்களை உருவாக்கும் வகையில் பல்துறைசார் அணுகுமுறைகளைப் பயன்படுத்தக்கூடியதாகவோ வேலைத்திட்டங்கள் அமையலாம். இன்னும் வேறு வகைகளிலும் அமையலாம்.

ஆய்வுத்திட்டங்கள் தெளிவான ஆய்வு நோக்கங்கள், ஆய்வுப் பொருள் குறித்த ஆழமான, விசாலமான விவரணை (in-depth background survey), விமர்சனரீதியிலான ஆய்வுக் கேள்விகள், கறாரான முறையியல்கள், பொதுத்தளத்தில் பகிர்ந்துகொள்ளக்கூடிய ஆய்வுமுடிவுகள் ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கவேண்டும். வேலைத்திட்ட ஆய்வு முடிவுகள் புத்தகங்கள், கட்டுரைகள், திரைப்படங்கள், இணையத் தளங்கள், பல் ஊடகக் (multi-media) கண்காட்சிகள் போன்ற வடிவங்களில் வெளிவரலாம். இன்னும் வேறு வடிவங்களிலும் வெளிப்படலாம்.

இந்த வேலைத்திட்ட முன்வரைவு குறித்த அறிவிப்பினைப் பிற இந்திய மொழிகளில் வாசிக்க, இங்கே சொடுக்கவும்.

**வேலைத்திட்டத்திற்கான கால அளவு:**
குறைந்தது **ஒரு வருட** காலம்; அதிகப்பட்சமாக **18 மாதங்கள்**

**வரவுசெலவுத் திட்ட அளவு:**
உங்களின் வரவுசெலவுத் திட்டத்தின் உச்சவரம்பு **ரூ. 5,00,000/-** வரை இருக்கலாம்

**விண்ணப்பிக்கக் கடைசி நாள்:** புதன்கிழமை, ஆகஸ்ட் 16, 2023, 11:59 பி.ப. (ஐ.எஸ்.டி.)

**யார் யாரெல்லாம் விண்ணப்பக்கலாம்?**

நிறுவனம் சாராத அறிஞர்கள் (independent scholars), ஆராய்ச்சியாளர்கள், கலைச் செயற்பாட்டாளர்கள் போன்ற அனைவரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர்கள் எந்தத் துறை அல்லது புலத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

இந்தியக் குடிமக்கள் அனைவரும் திட்ட முன்வரைவுகளை அனுப்பத் தகுதியுடையவர்கள். விண்ணப்பிப்பவர்கள் மட்டுமல்லாது அவர்களுடன் சேர்ந்து இத்திட்டங்களில் உடனியங்க இருக்கும் பிற பங்கேற்பாளர்களும் இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும். (விண்ணப்பிப்பதற்கான தகுதி நிலைகளைப் பற்றிய கூடுதல் விபரங்களுக்கு இங்கே சொடுக்கவும்.)

**விண்ணப்பப் படிமுறை**

**உங்களின் முன்வரைவுகள் கீழ்கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்:**

- உங்களின் முன்வரைவின் உள்ளடக்கமானது தெளிவான ஆய்வு நோக்கங்கள், ஆய்வுப் பொருள் குறித்த ஆழமான விசால விவரணை (in-depth background survey), விமர்சன ரீதியிலான (critical) ஆய்வுக் கேள்விகள், கறாரான முறையியல்கள், தெளிவான ஆய்வுமுடிவுகள் ஆகியவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டும்;
- உங்களின் படைப்பாக்கம் குறித்ததொரு பார்வையைத் தரும் வகையிலான சான்றாதாரங்கள் (supporting material) ஏதேனும் இருப்பின் அவற்றையும் அனுப்புங்கள்;
- தன் விவரணைக் குறிப்பு (curriculum vitae);
- வேலைத்திட்டத்திற்கான நிதி எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதை விளக்கும் வகையில் ஒரு விரிவான வரவுசெலவுத் திட்டம்; இவ்வேலைத்திட்டம் தொடர்பாக வேறு மூலங்களிலிருந்து நிதி பெற வாய்ப்புகள் இருப்பின் அவை பற்றிய விபரங்களையும் தயைகூர்ந்து குறிப்பிடவும்;
- உங்களின் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**பொதுத்தகவல்:**

- வேலைத்திட்டம் தொடர்பான ஊழியர் செலவினங்கள், செயற்பாடுகள், பயணங்கள் முதலியவற்றை மட்டுமே எங்களின் நிதி ஈடு செய்யும். தேவை ஏற்படின், தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் உபகரணங்களுக்கான வாடகையை ஓரளவு வழங்க முடியும். வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் இடம்பெறும் ஒவ்வொரு கூறும் வேலைத்திட்டம் தொடர்பான ஒரு குறிப்பிட்ட செலவினங்களோடு தொடர்புடையதாக அமையுமாறு தயைகூர்ந்து உறுதிப்படுத்துங்கள்.
- மொத்த வரவுசெலவுத் தொகையில் 35% -க்கு மிகாமல் மதிப்பீட்டுத் தொகை (honorarium) கோரலாம்.
- வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் நிறுவனம் சார்ந்த அலுவலகச் செலவினங்கள், கட்டிடச் செலவினங்கள் அல்லது உட்கட்டமைப்பு வளர்ச்சி போன்றவற்றைத் தயைகூர்ந்து சேர்க்க வேண்டாம். தொழில்நுட்பக்கருவிகள் வாங்குவதை ஐ.எ.ஃப்.ஏ. ஆதரிப்பதில்லை. ஆனால், உங்களின் வேலைத்திட்டத்தின் பொருட்டு நீங்கள் தொழில்நுட்பக் கருவிகளை வாங்க வேண்டி ஏற்பட்டால், அவற்றை உங்களின் வேலைத்திட்டம் முடிந்தவுடன் ஐ.எ.ஃப்.ஏ.விடம் ஒப்படைக்க வேண்டும்.

**தேர்வு செய்யப்படும் முறை:**

தேர்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகள் புறத்தேர்வாளர் குழுவினரால் மதிப்பீடு செய்யப்படும். விண்ணபதாரர்கள் இக்குழுவினரின் முன்னிலையில் தங்களின் திட்டம் குறித்த எண்ணங்களை அளிக்கை செய்ய வேண்டும். செயலாக்கத்தின் பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்படும் திட்ட முன்வரைவுகள் டிசம்பர் மாதத்தில் (2023) அறிவிக்கப்படும். திட்ட முன்வரைவுகளைத் தேர்ந்தெடுப்பதில் ஐ.எ.ஃப்.ஏ.வின் முடிவே இறுதியானது.

**முன்வரைவினைச் சமர்ப்பித்தல்:**

- **நீங்கள் வேலைத்திட்ட முன்வரைவுகளை ஆங்கிலம் உள்ளிட்ட எந்த இந்திய மொழியிலும் எழுதலாம். இந்திய மொழிகளில் நிகழ்ந்து வருகின்ற சொல்லாடல்களுக்குப் பங்களிப்புச் செய்யும் நோக்கில், ஆங்கிலத்தைக் காட்டிலும், பிற இந்திய மொழிகளில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை ஐ.எ.ஃப்.ஏ ஊக்கப்படுத்துகின்றது.**
- வேலைத்திட்ட முன்வரைவினை அனுப்புவதற்கு முன், உங்களின் ஆய்வுத்திட்டம் குறித்து விவாதிக்க விரும்பினாலோ அல்லது அது தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தாலோ அவற்றைக் குறித்து கலை ஆய்வுத்திட்டத்தின் திட்ட அலுவலரான கர்ஸிதா பத்வால் அவர்களுக்கு, harshita@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில், கலை

ஆய்வுத்திட்டத்திற்கான முன்வரைவு (Project Proposal for Arts Research) என்ற தலைப்புடன், ஜூலை 31, 2023 (திங்கட்கிழமை)க்கு முன்பாக, எழுதுங்கள்.

- உங்களின் இறுதித் திட்ட முன்வரைவுகளை இணைய வழியாக, கலை ஆய்வுத்திட்டத்திற்கான முன்வரைவு / (Project Proposal for Arts Research) என்ற தலைப்புடன், 25 MB க்கு மிகாமல், ஒரே மின்னஞ்சலில், கலை ஆய்வுத்திட்டத்தின் திட்ட அலுவலரான கர்ஸிதா பத்வால் அவர்களுக்கு, harshita@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரியில், ஆகஸ்ட் 16, 2023, புதன்கிழமை, 11:59 பி.ப.(ஐ.எஸ்.டி.)க்குள் அனுப்ப வேண்டும்.

முழுமையாகப் பூர்த்தியடையாத திட்ட முன்வரைவுகளும் விண்ணப்பிப்பதற்கான தகுதி பெறாதவர்களின் திட்ட முன்வரைவுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைத் தயைகூர்ந்து கவனத்தில் கொள்ள வேண்டுகின்றோம்.

தேர்ந்தெடுக்கப்படும் அனைத்துச் செயல்திட்டங்களும் ஐ.எ.ஃ.ப்.ஏ.வினால் செயல்படுத்தப்படும்.

**குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கக்கூடிய, மதிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய வகையிலான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ஐ.எ.ஃ.ப்.ஏ. உறுதி பூண்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் இந்நோக்குடன் ஒத்துப்போக வேண்டும் என்பதோடு எப்போதும் அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.**

**குலை ஆய்வுத் திட்டம் பி.என்.பி. பரிபாஸ் இந்தியா (BNP Paribas India) நிறுவனத்தின் நிதிநல்கையினால் சாத்தியமானது.**